# பருத்தியின் விலை பிரகாசிக்க வாய்ப்பில்லை

உலகின் அதிக பருத்தி உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியாவும் முக்கியமான நாடாகும். நாட்டின், மொத்த இழைப் பயிர் நுகர்வில் கிட்டத்தட்ட 58 சதவீதம் பங்களிப்பை வழங்குவதன் மூலம் இந்தியாவில் ஜவுளித் தொழிலை பருத்தி நிலை நிறுத்துகிறது. இந்திய ஜவுளி அமைச்சகத்தின் படி, 2022-23 –ம் ஆண்டில் பருத்தி 130.61 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 343.47 இலட்சம் பேல்கள் (1 பேல்=170 கிலோ) உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில், குஜராத், மகாராஷ்டிரா, தெலுங்கானா, ஹரியானா, மத்திய பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் பருத்தியை அதிகளவு உற்பத்தி செய்கின்றது.

பருத்தி 2022-23 –ம் ஆண்டில் 1.62 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 3.56 இலட்சம் பேல்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பெரம்பலூர், சேலம், தர்மபுரி, அரியலூர், திருச்சி, விருதுநகர், மதுரை மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் பருத்தி அதிகளவு பயிரிடப்படுகின்றது. மாநிலத்தில், பருத்தி இறவை மற்றும் மானாவாரி விவசாய முறையில் பயிரிடப்படுகின்றது. தென் மாவட்டங்களில் மானாவாரி விதைப்பு அக்டோபர் மாதம் வரை நீடிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு கிடைத்த விலையின் அடிப்படையில் பருத்தி சாகுபடியை விவசாயிகள் இந்தியா முழுவதும் அதிக அளவில் பயிரிட்டனர். அதிக மகசூல் தரக்கூடிய, குறுகிய கால ரகங்களை தேர்வு செய்ததன் மூலம் அதிகபட்ச லாபம் ஈட்ட பருத்தி விவசாயிகள் முயன்றதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, நாட்டின் மேற்கு மண்டல மாநிலங்களில் பருத்தி சாகுபடி பரப்பு கணிசமாக அதிகரித்துள்ளது. நல்ல விலையை எதிர்பார்த்து பருத்தி விவசாயிகள் வைத்திருந்த கையிருப்பு சமீபத்திய சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால், தரமின்மை மற்றும் உபரி வரத்து காரணமாக பருத்தி விலை மேலும் சரிந்தது. கடந்த

ஆண்டில் (2022) உணரப்பட்ட விலை உயர்வை கட்டுபடுத்த முன்னெச்சரிக்கையாக 10 இலட்சம் பேல்கள் பருத்தி இறக்குமதி செய்யப்பட்டது போன்றவற்றால், நடப்பு பருவத்தில் பருத்தியின் விலை உயர வாய்ப்பில்லை. எனவே, கோடைகால பாசன பருத்தியை விவசாயிகள் உடனடியாக விற்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு மற்றும் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில், தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இயங்கி வரும், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் விலை முன்னறிவுப்புத் திட்டம், கடந்த 26 ஆண்டுகளாக சேலம் பகுதியில் நிலவிய விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், பருத்தியின் சராசரி பண்ணை விலை அறுவடையின் போது குவிண்டாலுக்கு ரூ.6500 முதல் ரூ.6800 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மானாவாரி பருத்தியின் விதைப்பு முடிவுகளை அதற்கேற்ப மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் 641003
தொலை பேசி 04222431405

இயக்குனர் மற்றும் முனை அதிகாரி
நீர் மற்றும் புவியியல் ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003
தொலை பேசி - 0422 -6611278

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
பருத்தி துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641003
தொலை பேசி - 0422 -2456297

## Cotton-The White Gold will lose its Sheen!

India is the major producer of cotton in the world and it sustains the Indian cotton textile industry by contributing nearly 58 per cent in total fibre consumption. According to the Ministry of Textiles, Government of India, cotton is grown with a production of 343.47 lakh bales (1 bale = 170kg) in an area of 130.61 lakh ha during 2022-23. Gujarat, Maharashtra, Telangana, Haryana, Madhya Pradesh, Rajasthan and Andhra Pradesh are the major cotton producing states in India.

Cotton is grown in an area of 1.62 lakh hectares with 3.56 lakh bales of production during 2022-23 in Tamil Nadu. The major cotton producing districts are Perambalur, Salem, Dharmapuri, Ariyalur, Trichy, Virudhunagar, Madurai and Cuddalore. In Tamil Nadu, cotton is grown cotton both under irrigated and rainfed situations, whereas the sowing of the rainfed crop in the Southern districts is extended up to October.

Indian farmers have taken cotton cultivation in a large scale across the country based on the price realized during last year. Trade sources also reported that the farmers resorted to high yielding, short duration varieties to reap maximum profits immediately. Especially, area under cotton has increased substantially in the Western region of the country. With the anticipation of better price, the stocks held by the cotton farmers are affected by recent cyclone. So, poor quality and surplus arrivals made the cotton prices to fall. Further 10 lakh bales of cotton is being imported as a precaution to battle the price spike realized during 2022. There won't be any scope for price increase during current season. Hence, farmers are advised to dispose the summer irrigated cotton immediately.

The Price Forecasting Scheme has analysed the past 26 year historical cotton prices prevailed in Salem region and conducted market survey to facilitate farmers to take up selling and sowing decisions. As per the result of the analysis and market survey, the farm gate price of good quality cotton during harvest would be Rs.6500-6800 per quintal. Hence, farmers are advised to take up sowing decisions of rainfed cotton accordingly.

***For Market Information details, please contact:***

*i).Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003*
*Phone: 0422-2431405*

*ii).The Director and TN-IAMP Nodal Officer*
*Centre for Water and Geospatial Studies*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003*
*Phone: 0422-6611278*

***For Technical Details, please contact***

*Professor and Head,*
*Department of Cotton,*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore – 641 003*
*Phone No: 0422-2456297*